03-01-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சமூக விஞ்ஞான கற்கை வட்டம் 2013**

**திறந்த கலந்துரையாடல்**

பாடசாலையிடையே செல்லும் செயல்த்திட்டத்தின் தோல்வி குறித்துக் கலந்துரையாடப்பட்டது. இத்தோல்விக்கான காரணங்களாக, சரியான செயல்த்திட்டம் இல்லாமை. நாம் என்ன செய்யப் போகிறோம் என்று எமக்கும் சரியாகத் தெரியவில்லை மாணவர்களுக்கும் தெரியவில்லை போன்றவை முன்வைக்கப்பட்டன. ஆள்பலம் இல்லாமையை இத்தோல்விக்கான கராணமாகச் சொல்ல முடியாது என்று அழுத்தமாகக் கருத்துச்சொல்லப்பட்டது.

சமூக விஞ்ஞான வட்டத்தின் facebook group இன் நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடலின்போது, எமது Facebook குழுமம் மூடிய நிலையில் இருக்கின்றமை ஒரு குறையாகச் சொல்லப்பட்டது. குழுமத்தில் பகிரப்படும் விடயங்களை எவரும் பார்வையிடலாம். ஆனால் தேவையற்ற விடயங்கள் அங்கே பகிரப்பட்டு குழுமம் பயனற்ற தகவல்களால் நிரம்புவதைத் தடுக்குமுகமாகவே, பகிர்வுகளை உறுப்பினர்கள் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்ற கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது என்ற விளக்கம் அளிக்கப்பட்டது.

குறிப்பாக "Ceylon இலங்கை" என்ற profile, எந்தவிதமான மேலதிகக் கருத்துக்களோ உரையாடலைத்தூண்டுவதற்கான அறிமுகவுரையோ இன்றி ndpfront.com தளத்தின் தொடுப்புக்களை தொடர்ச்சியாக வெறுமனே பகிர்ந்துகொண்டிருந்த சம்பவம் நினைவுகூரப்பட்டு, அவ்வாறான விடயங்களைத் தடுப்பதற்காகவே குறித்த கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றமை விளக்கப்பட்டது.

சமூகவிஞ்ஞான கற்கை வட்டத்துக்கெனத் தனியாக ஒரு வலைப்பதிவு தொடங்கப்பட்டு அதில் செய்திமடலில் வெளிவரும் கட்டுரைகள் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் வலைப்பதிவுக்கான வேலைகளை உடனடியாகவே தொடங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கொழும்பைத்தாண்டி வெளி மாவட்டங்களில் கற்கை வட்டங்களைச் செயற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஏற்கனவே இரத்தினபுரியில் ஒழுங்காக இது நடைபெறுகிறது. வவுனியாவில் தொடங்கப்பட்டதெனினும் தொடர்ச்சியாக நடைபெறுவதில்லை. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும்வட்டங்களைத் தொடங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

"கற்கை வட்டம்" என்பதா "கல்வி வட்டம்" இலக்கணரீதியில் சரியானது என்பது பற்றி உரியவர்களிடம் ஆலோசனை பெற்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல்கள் தொடங்கும் நேரம் தற்போது ஏழு மணியைத் தொட்டுவிட்டதால் பெண்கள் கூட்டங்களுக்கு வரமுடியாமல் இருக்கும் நிலை பற்றி கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. கூட்டம் இடம் பெறும் நாளை மாற்றுவதா; பெண்களுக்கெனத் தனியாக ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதா; நேரகாலத்தோடு கூட்டத்தைத் தொடங்குவதா பொருத்தமானதென உரையாடப்பட்டது. முடிவில் வியாழக்கிழமைக் கூட்டங்களை 6 மணிக்கே தாமதமின்றித் தொடங்குவதாக முடிவு செய்யப்பட்டது.

திரைப்படக்காட்சியும் உரையாடல்களும் இடம்பெறும் "ஒளிரும் விழித்திரை" நிகழ்ச்சியை மீளவும் தொஅங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஒரு மாதத்தின் நான்று வட்டங்களும் நிரந்தரமாக வரையறுக்கப்பட்ட விடயப்பரப்புக்களுள் அடங்கி இருக்க வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

பாலியல் வல்லுறவு (Sexual Violence)

வே. வீரசிங்கம் | 10-01-2013



ஸ்டீபன் ஹாக்கிங்

**ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் (Stephen William Hawking, பிறப்பு: ஜனவரி 8, 1942), ஒரு கோட்பாட்டு இயற்பியலாளர் ஆவார்;** இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டில் பிறந்தவர்.கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துக்கான லூக்காசியன் பேராசிரியராக உள்ளார்.

இவருடைய முக்கியமான ஆய்வுத்துறைகள், அண்டவியலும் (cosmology), குவாண்ட்டம் ஈர்ப்பும் (quantum gravity) ஆகும்.

ஸ்க்லெரோசிஸ் (myotrophic Lateral Sclerosis,) என்னும் நரம்பு நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, கை, கால் முதலிய உடலியக்கங்களும் பாதிக்கப்பட்டு, பேச்சையும் இழந்தநிலையில் கணினியூடாகப் பேச்சுத் தொகுப்பி மூலம் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டாயத்துக்குள்ளான இவர், இயற்பியல் ஆராய்ச்சிகளிலும், எழுத்துத்துறையிலும், பொதுவாழ்விலும் மிகவும் ஈடுபாடு உள்ளவராகவேயுள்ளார்.

இவர் எழுதிய அறிவியல் நூல்களான, நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு (A Brief History of Time), The Universe in a Nutshell ஆகிய இரண்டும், உலகம் முழுவதும் மிகப் பிரபலமாக விற்பனையாகிச் சாதனை படைத்தன. சாதாரண மக்களும் வாசித்துப் பயனடையும் வகையில் இலகுவான மொழியில், அறிவியற் சமன்பாடுகளைத் தவிர்த்து எழுதப்பட்ட இந் நூல்கள் பலரையும் கவர்ந்தது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம் 2013

முன்பக்கத் தொடர்ச்சி..

எடுத்துக்காட்டாக, புதிய விடயங்கள், பொது விடயங்கள் தொடர்பாக ஒருவாரம், அரசியலுக்கு இன்னொரு வாரம் என்றவாறாக அமையும்.

கலந்துரையாடலைத் தொடக்கிவைப்பதற்கு நாம் அழைக்கத்தக்க வளவாளர்களை இனங்கண்டு ஒரு தரவுத்தளம் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அவ்வாறானதொரு தரவுத்தளத்தை உருவாக்கும் வேலைகளை உடனடியாகவே தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

கொழும்பைத்தாண்டி வெளி மாவட்டங்களில் கற்கை வட்டங்களைச் செயற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஏற்கனவே இரத்தினபுரியில் ஒழுங்காக இது நடைபெறுகிறது. வவுனியாவில் தொடங்கப்பட்டதெனினும் தொடர்ச்சியாக நடைபெறுவதில்லை. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும்வட்டங்களைத் தொடங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சமூகவிஞ்ஞானக் கற்கைவட்டம் தொடர்பான சுருக்கமான நல்ல அறிமுகத்தைக்கொண்ட, எவ்வேளையிலும் விநியோகிக்கத்தக்க துண்டுப்பிரசுரம் ஒன்று அச்சிடப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

### பாலியல் வன்முறை (Sexual Violence)
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

* பாலியல் வல்லுறவு (Rape) என்றால் என்ன?


* அது ஏன் மிகப்பெரும் விடமாகக் கருதப்படுகின்றது?

* பாலியல் வல்லுறவு தொடர்பான தரவுகள்

* இது தொடர்பான சர்வதேச, இலங்கை வியாக்கினங்கள்.

* பாலியல் வல்லுறவு இடம்பெறுவதற்கான காரணங்கள்.

* தடுக்கும் வழிவகைகள்




## பாலியல் வல்லுறவு தொடர்பான சில தரவுகள்...

**பாலியல் வல்லுறவு (Rape) என்றால் என்ன?**

பாலியல் வல்லுறவு (Rape) என்ற பதம் இலத்தீன் சொல்லாகிய “rapere” என்றால் அபகரித்தல் அல்லது பலாத்காரமாக எடுத்துக் கொள்ளுதல் (to seize or take by force) என்பதிலிருந்து வந்த சொல்லாகும். ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் உடல்/அதிகார பலத்தையோ அல்லது அவரின் இயலாமையையோ விருப்பம் பெற்றுக் கொள்ளும் வயதெல்லைக்கு குறைந்ததன்மையையோ பயன்படுத்தி அவருடன் செய்யப்படும் பாலுறவு அல்லது பாலியல் செயற்பாடு பாலியல் வல்லுறவு எனப்படும்.

*“Sexual intercourse, which is initiated by one or more persons against another person without that person's consent. The act may be carried out by physical force, coercion, abuse of authority or with a person who is incapable of valid consent, such as one who is unconscious, incapacitated, or below the legal age of consent.*

16 வயதிற்கு குறைந்த பெண் பிள்ளைகளுடன் அவர்களின் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ செய்யும் பாலியல் புணர்ச்சி அல்லது பாலுறவு (ஆணுறுப்பை மற்றவரின் பெண் உறுப்பிலோ அல்லது குதத்திலோ உட்புகுத்துதல்)

**இலங்கைத் தண்டணைச் சட்டக் கோவை சரத்து 363ன் படி பாலியல் வல்லுறவு தண்டணைக்குறிய குற்றமாகும் :-**

கீழ் வரும் 5 விசேட சந்தர்ப்பங்களில் பெண்களுடன் செய்யப்படும் பாலியல் செயற்பாடு பாலியல் வல்லுறவு என வகைப்படுத்தப்பட்டடுள்ளது.

1. சம்மதமின்றி செய்யப்படும் ஒரு பெண்ணுடனான பாலியல் உறவு.

2. சம்மதத்துடனாக இருந்தாலும் அச்சம்மதம் தடுத்துவைத்து, உளைச்சலை ஏற்படுத்தி அல்லது பயமுறுத்தி சம்மதம் பெற்றுக் கொண்டு செய்யப்படும் ஒரு பெண்ணுடனான பாலியல் உறவு.

3. தனது விருப்பத்தையோ அன்றில் விருப்பமின்மையையோ வெளிப்படுத்த முடியாத நிலையில் தானாக அன்றில் வேறு ஒருவரினால் (குறித்த நபரினால்) போதையேற்றுவதன் மூலம் மயக்கமுற்றிருந்த அல்லது சுயநினைவற்றிருந்த வேளையில் செய்யப்படும் ஒரு பெண்ணுடனான பாலியல் உறவு.

4. தனது துணை என தவறுதலாக எண்ணி வழங்கப்பட்ட சம்மதத்துடன் செய்யப்படும் ஒரு பெண்ணுடனான பாலியல் உறவு.

5. 18 வயதிற்கு குறைந்த பெண் பிள்ளையுடன் அவளின் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ செய்யும் பாலியல் புணர்ச்சி மற்றும் சட்டரீதியாக பிரிந்த பின்னர் சம்மதமின்றி செய்யப்படும் ஒரு பெண்ணுடனான பாலியல் உறவு.

பாலியல் உறவு என்பது:- ஆணுறுப்பை மற்றவரின் பெண் உறுப்பில் உட்புகுத்தி செய்யப்படும் புணர்ச்சி.
இது குழு வல்லுறவு, திருமணத்திற்கு பின்னரான வல்லுறவு, இரத்த உறவுகளுடனான வல்லுறவு, சிறுவர்களுடனான வல்லுறவு, சிறைச்சாலை வல்லுறவு, நட்புறவுடனான (acquaintance) வல்லுறவு, யுத்தத்தின் போதான வல்லுறவு, மற்றும் 18 வயதிற்கு குறைந்த பெண் பிள்ளையுடனான உறவு போன்ற பல வகையில் இடம்பெறலாம்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA